# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| | | |
|---|---|---|
| தரம் - 9 | புவியியல் | நேரம் :- 2 மணித்தியாலம் |

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடுகள்**

01. உலகில் மிகப்பெரிய மலைத்தொடர் அமைந்திருக்கும் கண்டம்.
   1. ஐரோப்பா  2. ஆசியா  3. வட அமெரிக்கா  4. ஆபிரிக்கா

02. புவியின் மொத்த நிலப்பரப்பில் ஆசியா கண்டத்த்குரிய நிலப்பகுதி.
   1. 29%  2. 30.7%  3. 8.7 %  4. 30%

03. “உலகின் முகடு” என அழைக்கப்படும் மேட்டுநிலம்.
   1. பமீர் மேட்டு நிலம்  2. தக்கண மேட்டு நிலம்
   3. திபெத் மேட்டு நிலம்  4. ஈரான் மேட்டு நிலம்

04. யூப்ரடீஸ், தைகிரிஸ் நதிகள் சென்றடைகின்ற பிரதேசம்.
   1. பாரசீகக்குடா  2. கஸ்பியன் கடல்
   3. ஆட்டிக் சமுத்திரம்  4. ஏரல் கடல்

05. உலகின் மிகவும் ஆழமான நன்னீர் ஏரியாக அமைவது.
   1. பைக்கால் ஏரி  2. பொல்காஸ் ஏரி
   3. தங்கனிக்கா ஏரி  4. அயர் ஏரி

06. இலங்கையின் நீளம், அகலம் முறையே
   1. 224Km, 432 Km  2. 242Km, 431Km
   3. 432 Km, 243 Km  4. 432Km, 224Km

07. அயன வலயக் கால காலநிலைப் பிரதேசத்தின் சராசரி வெப்ப நிலையாக கருதப்படுவது.
   1. $27^0C$  2. $18^0C$  3. $32^0C$  4. $15^0C$

08. ஆசியாவில் அதிக வெப்பநிலை நிலவும் ஜகோபாபாத் (Jacobabad) நகரம் அமைந்துள்ள நாடு.
   1. உக்ரெயின்  2. ரஷ்யா  3. பாகிஸ்தான்  4. ஈரான்

09. வருட ரீதியாக வெப்பமான கோடை காலமும், குளிர்காலமும் காணப்படுகின்ற பிரதேசத்தில் காணப்படுகின்ற காட்டு வகை.
   1. இடைவெப்ப இலையுதிர் காடுகள்  2. ஊசியிலைக் காடுகள்
   3. அயன மழைக் காடுகள்  4. குளிர் வலயக் காடுகள்

10. ஆசியப் பிரதேசத்தில் உருவாகிய நாகரிகம் அல்லாதது.
   1. மொசப்பத்தேமிய நாகரீகம்  2. கங்கைநதி நாகரீகம்
   3. சிந்துவெளி நாகரீகம்  4. எகிப்திய நாகரீகம்

11. மொங்கலோயிட் இன மக்கள் வாழ்கின்ற நாடு.
   1. கொரியா  2. பாகிஸ்தான்  3. ஆப்கானிஸ்தான்  4. அராபிய நாடுகள்

12. அதிக சனத்தொகை அடர்த்தியை கொண்டிராத ஆசியப் பிரதேசம்
   1. தென்னாசியா  2. மத்திய ஆசியா  3. தென்கிழக்கு ஆசியா  4. கிழக்கு ஆசியா



kalvi.lk

13. உலகில் பரந்த நீர்பாசனத் தொகுதியை உடைய நாடாக விளங்குவது.

1. இந்தியா 2. இலங்கை 3. பாகிஸ்தான் 4. மலேசியா

14. உலகில் அணு மின் சக்தியை அதிகளவில் பயன்படுத்தும் நாடுகளில் முதன்மை வகிப்பது.

1. ரஷ்யா 2. ஜப்பான் 3. சீனா 4. சிங்கப்பூர்

15. டுபாய் நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைவது.

1. தைத்த ஆடை 2. மின்னியல் உபகரணம்
3. கனிய நெய் 4. பொதியிடப்பட்ட பொருட்கள்

16. முழுமையாக நோக்கும்போது இலங்கையில் காணப்படும் ஆறுகளின் வடிகாலமைப்பு.

1. மரநிகர் வடிகால் 2. ஆரைவடிகால்
3. கங்கணவடிகால் 4. சட்டத்தட்டுவடிகால்

17. இலங்கையின் மொத்த நிலப்பகுதியில் $\frac{1}{6}$ பகுதியை தன்னகத்தே கொண்டுள்ள நதியாக அமைவது.

1. களனி கங்கை 2. ஜின் கங்கை 3. களுகங்கை 4. மகாவலிகங்கை

18. கடற்கரையை அண்டி அரிப்புக்குட்படாத பாறைகளை கொண்ட குத்துச்சரிவுள்ள பகுதிகள்

1. தீவுகள் 2. முனை 3. கரையோர ஓங்கல் 4. குடா

19. கழிமுகங்கள் காணப்படும் தரைத்தோற்ற பிரதேசம்.

1. கரையோரச் சமவெளி 2. உள்ளகச் சமவெளி
3. மத்திய மலைநாடு 4. இடைநிலைச் சமவெளி

20. ஆதாமின் சிகரம் என அழைக்கப்படும் மலைத்தொடர்.

1. பீதுறுதாலகால மலைத்தொடர் 2. சிவனொளிபாத மலைத்தொடர்
3. நமுனுகுல மலைத்தொடர் 4. நக்கிஸ் மலைத்தொடர்

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk


## பகுதி II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

*(01)* உலகப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களை உரிய அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | | |
|---|---|---|
| *1.* ஜப்பான் | ( ) | *7.* இந்து சமுத்திரம் |
| *2.* மடகஸ்கார் | ( ) | *8.* செங்கடல் |
| *3.* வங்காள விரிகுடா | ( ) | *9.* ரஷ்யா |
| *4.* பாகிஸ்தான் | ( ) | *10.* சீனா |
| *5.* அரபிக்கடல் | ( ) | *11.* கங்கைநதி |
| *6.* டுபாய் | ( ) | *12.* திபெத் மேட்டுநிலம் |

(12 x 1 = 12 புள்ளிகள்)




*(02)* i. ஆசியாக் கண்டத்தில் உள்ள தீவுகள் மூன்று தருக?

ii. ஆசியாக்கண்டத்தின் சார்பு அமைவிடத்தை குறிப்பிடுக?

iii. ஆசியா கண்டத்தின் சிறப்பு அம்சங்கள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

*(03)* i. ஆசியப் பிரதேசத்தில் காணப்படுகின்ற *3* மலைத்தொடர்களைக் குறிப்பிடுக?

ii. இமயமலைத் தொடரில் அமைந்துள்ள மிக உயரமான சிகரங்கள் நான்கு தருக?

iii. ஆசிய பிரதேசத்தில் காணப்படும் பின்வரும் நதிகள் சென்றடையும் கடல் / சமுத்திரங்களின் பெயர்களை குறிப்பிடுக.

*1.* ஒப்

*2.* குவாங்கோ

*3.* பிரம்மபுத்ரா

*4.* யாங்சி

*5.* அமுர்

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)




kalvi.lk

(04) i. இயற்கைத்தாவரம் மற்றும் வனவிலங்குகளின் வளர்ச்சிப்போக்கில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள் இரண்டு தருக.

ii. தாவர வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உலகின் பிரதான காலநிலை வலயத்துக்குரிய காடுகளை வகைபடுத்துக.

iii. பிரதான காலநிலை வலயத்தில் காணப்படுகின்ற காடுகளுள் காணப்படும் தாவரவகைகள் விலங்குகளுக்கு உதாரணங்கள் மூன்று வீதம் தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(05) i. கொகசோயிட் இன மக்கள் வாழ்கின்ற ஆசியப் பிரதேசங்கள் மூன்று தருக?

ii. ஆசியாவின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு தருக?

iii. 1. ஜப்பானின் பிரதான கைத்தொழில் துறையாக விளங்குவது எது?

2. அவ்வாறு விளங்குவதற்குரிய காரணங்கள் நான்கு தருக?

(06) 1. இலங்கையின் பிரதான தரைத்தோற்ற வலயங்கள் மூன்றினையும் தருக?

2. தரைத்தோற்றப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் காணப்படும் பௌதீக அம்சங்கள் இரண்டு வீதம் குறிப்படுக.

3. பின்வருவனவற்றுக்கு விரைவிலக்கணம் தருக?

1. குடா 2. முனை 3. மேட்டுநிலம் 4. கணவாய்

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(07) 1. பௌதீக அம்சம் என்றால் என்ன?

2. இலங்கையின் இடவிளக்கப்படத்தில் பயன்படுத்தப்படுகின்ற நிர்வாக எல்லைகள் நான்கு தருக?

3. பின்வரும் புவியியல் அம்சங்களுக்கான குறியீடுகளை பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.

1. பாடசாலை
2. வைத்தியசாலை
3. இந்துக் கோயில்
4. பிரதான வீதி A தரம்
5. நெற்பயிர்ச்செய்கை (3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான**
**மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில**
**மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457